பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**16 10 2026 FRIDAY 12.40 PM**

ஆகாஷ்வாணி

தலைப்புச் செய்திகள்

1. இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

2. உணவுப் பொருட்கள் வீணாவதை தடுக்க வேண்டியதன் அவசியத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சௌகான் வலியுறுத்தியுள்ளார்.

3. விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவுதினத்தையொட்டி தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

4. மேற்காசிய பகுதியில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று இந்தியா, ஐ நா பாதுகாப்பு சபையில் வலியுறுத்தியுள்ளது.

5. 23 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Komal வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>>>

இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

சர்வதேச செலாவணி நிதியம் உலக வங்கி ஆண்டுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக தாய்லாந்து தலைநகர் பாங்காக் சென்றுள்ள அவர், அட்லாண்டிக் குழும கூட்டத்தில் நடைபெற்ற உரையாடலின்போது இதை தெரிவித்தார்.

இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் இருநாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் என்றும், உலகளாவிய வர்த்தகத்திற்கும் உத்வேகம் அளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இருநாடுகளுக்கும் இடையேயான இந்த ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகள் முடிவுறும் தருவாயில் இருப்பதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக, பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ள மத்திய தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ்கோயல், வர்த்தக ஒப்பந்தத்திற்கான முதல்கட்ட பேச்சுக்கள் நிறைவுபெற்று, சட்ட ரீதியாக இதனை இறுதிசெய்வதற்கான நடவடிக்கைகள் தற்போது

மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளதை திருமதி நிர்மலா சீதாராமன் சுட்டிக்காட்டினார்.

இந்திய — அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை விரைவில் இறுதி செய்ய வேண்டும் என்பதில் இருநாடுகளுமே மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<>>>>>>

மத்திய அரசு மற்றும் அமைப்புகளுக்கு எதிராக காங்கிரஸ் கட்சி நடத்திவரும் போராட்டங்கள் உள்நோக்கம் கொண்டவை என்று பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

லக்னோவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காங்கிரஸ் தமது தேர்தல் தோல்விகளை மறைப்பதற்காக மக்களிடம் தவறான தகவல்களை அளித்து திசை திருப்புவதாகவும், தெரிவித்தார்.

வன்முறைக்கு துணைபோகும் காங்கிரஸ் கட்சியினர், தேசப்பிதா காந்தியின் பெயரை பயன்படுத்துவதில் எவ்வித தார்மீக உரிமையும் கிடையாது என்றும் அவர் கூறினார்.

தலைமைத் தேர்தல் ஆணையரின் ராஜினாமா மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் போன்றவற்றுக்கு எதிராக காங்கிரஸ் போராடவில்லை என்பது அவர்களின் நடவடிக்கைகள் மூலம் தெளிவாக தெரிவதாகவும் திரு ராஜ்நாத் சிங் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>>>

உணவுப்பொருட்கள் வீணாவது தடுக்கப்பட வேண்டிதன் அவசியத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் வலியுறுத்தியுள்ளார்.

உலக உணவு தினத்தையொட்டி அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், நமது தேவைக்கு ஏற்ப உணவுப் பொருட்களை சமைக்க வேண்டும் என்றும், ஒவ்வொரு தானியமும் மதிப்புமிக்கவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

உணவுப்பொருள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள திரு சௌகான், நாட்டில் எவருக்கும் உணவு கிடைக்கவில்லை என்ற நிலையை மாற்ற முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

**1945**-ஆம் ஆண்டு முதல் அக்டோபர் **16**-ஆம் தேதி உலக உணவு தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

உணவுப் பொருள் உற்பத்தியில் புதிய கண்டுபிடிப்புகளை கொண்டுவந்து வளமான எதிர்காலத்தை உருவாக்குவோம் என்பது இவ்வாண்டின் கருப்பொருளாகும்.

<<<<>>>>>>

பெட்ரோல், டீசல் மற்றும் விமான எரிபொருளுக்கான ஏற்றுமதி வரியில் மத்திய அரசு மாற்றம் செய்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நிதியமைச்சகம் வெளியிட்டுள்ள உத்தரவில், இம்மாத இறுதிவரை பெட்ரோலுக்கான ஏற்றுமதி வரி லிட்டருக்கு **2** ரூபாய் **50** பைசாவாகவும், டீசலுக்கான ஏற்றுமதி வரி **8** ரூபாய் **50** பைசாவாகவும் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விமான எரிபொருளுக்கான ஏற்றுமதி வரி **10** ரூபாய் **50** பைசாவாக நீடிக்கும் என்றும், இதில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெட்ரோல் மற்றும் டீசலுக்கான உள்நாட்டு விற்பனை வரியில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவு இன்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய், பெட்ரோல், டீசல் மற்றும் விமான எரிபொருள் விலைகளின் சராசரி அடிப்படையில் இந்த மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>>

விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவுதினத்தையொட்டி தலைவர்கள் புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்நாளையொட்டி, குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி. ராதா கிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், அடக்குமுறைக்கு அஞ்சாமல், அந்நிய ஆட்சிக்கு எதிராக துணிச்சலுடன் குரல் கொடுத்து

மானத்தையும், கொள்கையையும் இறுதிவரை காத்த அவரது வீரமும், தியாகமும் இந்திய விடுதலை வரலாற்றில் என்றும் அழியாத இடத்தைப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தமிழக ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், கட்டபொம்மனின் துணிச்சலும், ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிரான உறுதிமிக்க நிலைப்பாடு என்றும் போற்றத்தக்கது என கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி, சென்னை மக்கள் மாளிகையில் ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், வீரபாண்டிய கட்டபொம்மன் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

<<<<>>>>>>

மக்கள் அனைவரது வாழ்விலும், எல்லையற்ற வலிமை, துணிச்சல், நேர்மறையான சக்தி ஆகியவற்றை நவராத்திரி பண்டிகை வழங்கட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இதனை தெரிவித்துள்ளார்.

நவராத்திரி பண்டிகையின் ஆறாம் நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று காலை தேவி **Katyayani** -க்கு சிறப்பு பூஜைகள் செய்தார்.

<<<<>>>>>>

மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சகத்தின் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் இந்திய சர்வதேச திரைப்பட திருவிழா கோவா-வில் அடுத்த மாதம் **20** ஆம் தேதி முதல் **28** ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இந்த திருவிழாவில் மக்கள் பங்கேற்பதற்கு பதிவு செய்யும் நடைமுறை தொடங்கப்பட்டுள்ளது.

இந்தவிழாவில் பங்கேற்பாளராகவும், வல்லுநராகவும் தங்களை பதிவு செய்துகொள்ள விரும்புவோர் **www.iffigoa.org** என்ற இணையதளத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு அமைச்சகம் கூறியுள்ளது. இந்த திருவிழாவில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பங்கேற்கின்றன.

எல்லைகள் தாண்டிய கதைகள் என்ற தலைப்பில் இந்த ஆண்டு திரைப்பட விழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திருவிழாவில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெறுபவர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

சர்வதேச அளவிலான திரைப்பட போட்டிகளும் இந்திய திரைப்படங்களில் சிறந்த திரைப்படங்களுக்கான தேர்வும் இதில் நடைபெற உள்ளது.

உலகின் மிகச்சிறந்த தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள், திரைத்துறையை சார்ந்த வல்லுநர்கள் இந்த திருவிழாவின் போது தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

<<<<>>>>>>

மேற்காசிய பகுதியில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்று பேசிய ஐ நா-வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு **Harish Parvathaneni,** இப்பகுதியில் செல்லும் வர்த்தக கப்பல்கள் மீது நடத்தப்படும் தாக்குதலில் இந்திய மாலுமிகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக கூறினார்.

பொது கட்டமைப்புகள் மீது தொடர் தாக்குதல் நடத்தப்படுவதை இந்தியா வன்மையாக கண்டிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்காசிய பகுதியில் பாதுகாப்பு மற்றும் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியுடன் உள்ளதாகவும் அவர் கூறினார்.

வர்த்தக கப்பல்கள், கடல் மாலுமிகள், தங்கு தடையின்றி பயணிப்பதற்கான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார்.

சர்வதேச கடல் பகுதியில் கடல்சார் வர்த்தகத்தை எக்காரணம் கொண்டும் தடை செய்யக்கூடாது என்றும் சர்வதேச விதிகளின்படி முழு பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

சவுதி அரேபியாவில் உள்ள விமான நிலையங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை இந்தியா கண்டிப்பதாகவும் அவர் கூறினார்.

ரியாத்தில் நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் இந்திய பிரஜையான முகமது யூசுப் அலி உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டது வேதனை அளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த இக்கட்டான நேரத்தில் சவுதி அரேபிய அரசு மற்றும் மக்களுக்கு ஆதரவாக இந்தியா உள்ளதாகவும் கூறினார்.

இந்திய மாலுமிகளுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என, ஓமன் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளதை வரவேற்பதாகவும் திரு **Harish Parvathaneni** தெரிவித்தார்.

<<<<>>>>>>

**23** வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Komal** வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார்.

அமெரிக்காவின் **Las Vegas**-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் **59** கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

-------------

சோலாப்பூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-1, 6-0 என்ற செட் கணக்கில் அமெரிக்காவின் **Adhithya Ganesan**-ஐ வென்றார்.

---------

ஹங்கேரி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆர்யன் லஷ்மணன் — செக் குடியரசின் **Jan Hrazdil** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-----------

இந்தியா-ஜிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் டுவென்ட்டி - டுவென்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

ராய்ப்பூரில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

----------------

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் தில்லி — மோகன்பஹான் அணியை எதிர்கொள்கிறது.

புதுதில்லியில் இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<**END**>>>>>>